# இரட்சிக்கப்பட்ட ஆத்துமாவின் போராட்டம்

(ரோமர் 7ஆம் அதிகாரம் வல்லமையில்லாத பரிசுத்த வாழ்க்கை பற்றி, இவ்வாறெல்லாம் வாழக்கூடாது என்பதை நமக்கு சுட்டிக் காட்டுகிறது)

- பழைய சுபாவத்தில் நன்மை ஏதுமில்லை. இரட்சிக்கப்பட்ட போது புதிய சுபாவம் கொடுக்கப்பட்டது. ஆனால்

**பழைய சுபாவத்தை தேவன் அப்புறப்படுத்துகிறதில்லை. மாற்றுகிறதில்லை.**

- நம் சரீரத்திலிருக்கும் வரை நம்மோடு கூட வருகிறது.
- இரட்சிக்கப்பட்ட போதும் முன்பிருந்தது போல பலவீனராகத்தான் இருக்கிறேன். (ரோமர் 18)

**புதிய சுபாவம் பரிசுத்தமாக வாழ விரும்பினாலும், அதற்கு பெலனில்லை. (ரோமர் 7:20.24)**
**புதிய சுபாவத்தில் எந்த வல்லமையும் இருப்பதில்லை.**
**புதிய சுபாவத்தின் விருப்பத்தை சார்ந்திருப்பதினாலே ஒரு விசுவாசி தன்னுடைய வாழ்க்கையிலே பரிசுத்தமாக வாழ முடியாது.**

- புதிய சுபாவத்தின் பெலத்தினாலே கிறிஸ்துவுக்காக வாழ முடியாது.
- பழைய சுபாவம் பாவத்தை விரும்புகிறது. புதிய சுபாவம் பாவத்தை வெறுக்கிறது. பழைய சுபாவம் துணிந்து பாவம் செய்கிறது. பாவம் செய்த பின் ஏன் இதை செய்தேன்? தேவனை துக்கப்படுத்திவிட்டேனே என வருந்திய அனுபவம் உங்களுக்கும் உண்டு.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

பவுல் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட போது, புதிய சுபாவம் 'நான் கர்த்தருக்காக ஜீவிக்க போகிறேன்' என சொல்லிக் கொண்டிருந்தது. பவுல் தானே கிறிஸ்தவ வாழ்க்கை வாழலாம் என நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அவரது வாழ்க்கையில் போராட்டமும் தோல்வியும் அடைந்தார்.

- பழைய சுபாவம இச்சிக்கிறது. புதிய சுபாவம் “இச்சிக்கிறது” தவறு என ஒத்துக் கொள்கிறது.

புதிய சுபாவம் பாவ சங்கிலியிலிருந்து மனிதனை விடுவிக்க முடியாது.

- நாம் நமது சொந்த பெலத்தினால் முயற்சி செய்து தேவன் விரும்பும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ முடியாது.

நான் அதிகம் வேதம் வாசிக்கிறேன், அதிகம் ஜெபிக்கிறேன், முன்பை விட சிறப்பாக வாழ்வேன் என்று சொந்த பெலத்தின் மீது நம்பிக்கை வைத்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ முயற்சி செய்தால் தோல்வி தான் காண்பீர்கள்.

- உங்களைக் குறித்து உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை குறித்து ஏமாற்றம் அடைவீர்களென்றால் உங்கள் சொந்த பெலத்தையே நீங்கள் நம்பியிருந்தீர்கள் என்பது தெரிய வரும்.
- நீங்கள் சோர்ந்து போக காரணம் தேவனை விசுவாசிக்கவில்லை. இது அர்ப்பணிப்பல்ல. விசுவாசம் மிக மிக முக்கியம்.
- தோல்வி கண்ட விசுவாசி திரும்ப திரும்ப ஒப்புக் கொடுக்கிறார். நான் இன்னும் சிறப்பாக வாழ விரும்புகிறேன் என்கிறார்கள். தாங்கள் அவ்வாறு வாழ முடியவில்லை என்பதையும் ஒத்துக் கொள்கிறார்கள். வாழ்க்கை பெலனில்லை முன்னேற்றமில்லை.
- வல்லமை எங்கியிருக்கிறது என்ற உண்மை அறியவில்லை.
- கர்த்தருக்காக வாழ யார் எனக்கு உதவி செய்ய முடியும்? வெளியிலிருந்து உதவி தேவை.
- மாம்சத்தை மேற்கொள்ளக்கூடிய ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

நாம் கிறிஸ்துவிலே பாவத்திற்கு மரித்து விட்டோம். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் பாவ சோதனை வராதபடி பாவத்திற்கு மரிக்கவில்லை. (பாவம் செய்ய முடியாத நிலைக்கு செல்ல முடியாது)

- பாவத்தின் வல்லமையை மேற்கொள்ள பெலன் தேவை.
- இது பரிசுத்த ஆவியானவர் பெலத்தினால் மட்டுமே முடியும்.

பரிசுத்த ஆவியானவர் மட்டுமே நமது வாழ்க்கையில் கிறிஸ்தவ வாழ்க்கையை ஏற்படுத்த முடியும்.

- பரிசுத்த ஆவியானவருக்கு நம்முடைய வாழ்க்கையை ஒப்பு கொடுப்பதைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்.
- நாமாக செயல்பட முடியாத காரியங்களை பரிசுத்த ஆவியானவரே செய்து முடிக்க எப்படி அனுமதிப்பது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

பரிசுத்தமாக்கப்படுதல் – பரிசுத்த ஆவியானவருடைய செயல்.

- பரிசுத்த ஆவியானவர் மட்டுமே பாவத்தின் வல்லமையிலிருந்து ஒரு விசுவாசியை விடுதலை செய்கிறார்.

பலவீனமான, பாவமான, மாம்சத்திலே பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை உண்டுபண்ண முடியும்.

- பரிசுத்த ஆவியானவரே நமக்கு வல்லமையை கொடுக்கிறார்.
- நாம் யுத்தம் செய்ய தேவையில்லை. பரிசுத்த ஆவியானவர் மாம்சத்திற்கு எதிராக யுத்தம் செய்கிறவராயிருக்கிறார்.

- பரிசுத்த ஆவியானவர் பழைய மனுஷனுக்கு எதிராக போராடுகிறார்.
- மாம்சத்தை மேற்கொள்ள விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். (ரோமர் 8ஆம் அதிகாரம்)




இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்